**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102061

1. District மாவட்டம் : திருச்சி  PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு  Year: ஆண்டு 2017  FIR No.: மு.த.அ. எண் 13/17  Date: நாள் 12.12.17

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988  Sections பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 12.12.17  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 11.00hrs  Time to : நேரம் வரை 14.00hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.17  Time : நேரம் 14.00hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம் (கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 8KM வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி ஸ்ரீரங்கம் சரக காவல் உதவி ஆணையர் அலுவலகம், திருச்சி மாநகரம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் சி. ராஜகண்ணா  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சந்திரசேகரன்
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 05.07.1971  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ரியல் எஸ்டேட்  (g) Address : முகவரி கதவு எண் 22/34 B, டைமண்ட் ரோடு சிபம் கார்டன், ஸ்ரீனிவாச நகர், புத்தூர் திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ஸ்ரீதர், காவல் உதவி ஆணையர், ஸ்ரீரங்கம் சரகம், திருச்சி மாநகரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

நான் (F.சேவியர் ராணி, காவல் ஆய்வாளர்) 12.12.2017 அன்று பிற்பகல் 14.00 மணியளவில் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருச்சி மாநகர், ஸ்ரீனிவாசநகர், 6வது மெயின்ரோடு, சுபம் கார்டன், கதவு எண்.22/34B-ஐ சேர்ந்த சந்திரசேகரன் மகன் திரு.ராஜேஷ்கண்ணா என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று, அந்த புகார் குறித்து, ரகசிய விசாரணை செய்ய, சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் புகாரின் விபரம் தெரிவித்து, அனுமதி பெற்று, புகாரில் கூறப்பட்டுள்ள, திருச்சி மாநகரம், ஸ்ரீரங்கம் சரக, காவல் உதவி ஆணையர் திரு.ஸ்ரீதர் மற்றும் புகார்தாரர் திரு.ராஜேஷ்கண்ணா ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி ரகசியமாக விசாரணை செய்ததில், புகாரில் கூறப்பட்டிருந்தபடி, புகார்தாரர் திரு.ச.ராஜேஷ்கண்ணாவிடம் எதிரி திரு.ஸ்ரீதர், கையூட்டாக பணம் கேட்டுள்ளார் என்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தெரியவந்தது. ஆகையால் புகார்தாரரின், புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்ய, காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank ....................: to take up the Investigation / Refused investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M. [illegible], ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ஊழல் தடுப்பு மற்றும் [illegible] காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது. திருச்சி

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

C. [signature] 12/12/2017 [signature] 12.12.17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 12.12.17
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் திருமதி. F. சேவியர் ராணி,
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருச்சி.

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.13/2017–இன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி......

தென்சரகம், சென்னை அவர்களின் அனுமதி பெற்று, இன்று 12.12.2017 ஆம் தேதி, மாலை 17.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2017 பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம் 1988–ன்படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் C.ராஜேஷ்கண்ணா, த/பெ.சந்திரசேகரன், கதவு எண்.22/34B, சுபம் கார்டன் 6வது மெயின்ரோடு, ஸ்ரீனிவாசநகர், புத்தூர், திருச்சி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. ஐயா, நான் திருச்சி மாநகர், ஸ்ரீனிவாசநகர், 6வது மெயின்ரோட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ரியல்எஸ்டேட் தொழில் செய்துவருகிறேன். என்னைப் போன்று ரியல்எஸ்டேட் செய்து வரும் உறையூர், ராமலிங்கநகரைச் சேர்ந்த திரு.லெட்சுமி காந்தன் என்பவருடன் சேர்ந்து தில்லைநகர், 8வது குறுக்குச் சாலையில் கதவு எண்.D88 என்கிற முகவரியிலிருந்த பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு, அந்த இடத்தில் 4 தளங்களில் 8 வீடுகள் கொண்ட அடுக்குமாடிக் கட்டிடம் ரூ.1,40,00,000/– மதிப்பீட்டில் கட்டுவதற்கு நாங்கள் இருவரும் தலா ரூ.70,00,000/– வீதம் முதலீடு செய்து கட்டுவதென கடந்த 28.11.2015–இல் ஒரு உடன் படிக்கை செய்துகொண்டோம். அந்த உடன் படிக்கையின்படி மேற்படி இடத்தில் கட்டப்படும் 8 வீடுகளில் 5 வீடுகளை, அந்த இடத்தின் உரிமையாளர்களுக்கும், மீதமுள்ள 3 வீடுகளை விற்பனை செய்து, அதில் கிடைக்கும் தொகையை சரிபாதியாக நாங்களிருவரும் பிரித்து கொள்வதென முடிவு செய்து, எனது பங்குத் தொகையாக ரூ.48,00,000/– ஐ, கடந்த 28.11.2015 அன்றே மேற்படி எனது பார்ட்னர் திரு.லெட்சுமி காந்தனிடம் கொடுத்தேன். பின்னர், மீதமுள்ள என் பங்குத் தொகையை கொடுக்க திரு.லெட்சுமிகாந்தனை அணுகியபோது, என்னிடம் பங்கு தொகையை வாங்காமல், கட்டிட வேலைக்கு தேவைப்பட்டால் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். ஆனால், பார்ட்னர் திரு.லெட்சுமிகாந்தன், நாங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி நடந்து கொள்ளாமல், மேற்படி கட்டிடத்தில் எங்களிருவருக்கும் பாத்தியப்பட்ட 3 வீடுகளில் 2 வீடுகளை வேறு வெளி நபர்களுக்கும், 1 வீட்டை அவரது மனைவிக்கும் கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ள விபரம், கடந்த 6 மாதம் முன்பாகதான் எனக்கு தெரியவந்தது. இதுப்பற்றி பார்ட்னர் திரு.லெட்சுமி காந்தனிடம் பலமுறை கேட்ட போதும் சரியான விளக்கம் சொல்லாமல், என்னிடம் வாங்கிய பணத்திற்கு மட்டும் வட்டியுடன் தருவதாக சொன்னார். பின்னர், கடந்த 05.10.2017 அன்று பார்ட்னர் திரு.லெட்சுமிகாந்தனின் மனைவி திருமதி.சுமதி அவர்களின் பெயரிலுள்ள வீட்டை எனக்கு கிரையம் செய்து கொடுப்பதாக முடிவு செய்யப்பட்டது. கிரையம் செய்து கொடுக்காததால், கடந்த 07.10.2017 அன்று பார்ட்னர் திரு.லெட்சுமிகாந்தன் மற்றும் சில முக்கியஸ்தர்களின் முன்னிலையில், மேற்படி கிரையம்/எனது பணம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தியபோது, பார்ட்னர் திரு.லெட்சுமிகாந்தனின் மனைவி திரு.சுமதி, எனக்கு ரூ.95,00,000/– தருவதாக பேசி ரூ.5,00,000/–க்கான காசோலையை முன் தொகையாக கொடுத்தார். மீதமுள்ள ரூ.90,00,000/–ஐ 2

மாதத்திற்குள் எனக்கு கொடுத்துவிடுவதாகவும், இல்லையெனில் மேற்படி வீட்டை என் பெயரில் கிரையம் செய்து தருவதாகவும், அதுவரை என்னை, மேற்படி வீட்டை அனுபவத்தில் வைத்திருக்குமாறும் கேட்டுக்கொண்டனர். அதன்படி நான், மேற்படி வீட்டை எனது அனுபவத்தில் வைத்திருந்தேன். இந்நிலையில், நானும், எனது நண்பர்கள் திரு.முரளிதரன் மற்றும் திரு.ஸ்ரீதரன் ஆகியோரும் மேற்படி பார்ட்னர் திரு.லெட்சுமி காந்தனை மிரட்டியதாக, கடந்த 01.12.2017 ஆம் தேதி எனது பார்ட்னர் திரு.லெட்சுமி காந்தன், திருச்சி, மாநகர காவல் ஆணையரிடம் எங்கள் மீது புகார் அளித்துள்ளார். அந்த புகார் மனு விசாரணைக்காக ஸ்ரீரங்கம் சரக காவல் உதவி ஆணையருக்கு வந்துள்ளதாகவும், விசாரணைக்கு நேரில் வரும்படி அழைத்தன்பேரில், நானும், எனது நண்பர் திரு.முரளிதரனும் கடந்த 03.12.2017 முதல் பல முறை ஸ்ரீரங்கம் சரக காவல் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு சென்று, அங்கு காவல் உதவி ஆணையர் திரு.ஸ்ரீதர் அவர்களை நேரில் சந்தித்து எங்கள் தரப்பு விளக்கத்தை தெரிவித்தோம். அதேபோல், மேற்படி பார்ட்னர் திரு.லெட்சுமி காந்தனும், ஒரு சில முறை விசாரணைக்கு வந்திருந்தார். இந்நிலையில், இன்று 12.12.2017 காலை சுமார் 11 மணியளவில் ஸ்ரீரங்கம் சரக காவல் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு சென்று, அங்கு காவல் உதவி ஆணையர் திரு.ஸ்ரீதர் அவர்களை நேரில் சந்தித்தபோது, மேற்படி மனு சம்பந்தமாக, எதிர் மனுதாரர்களான என்னையும், திரு.முரளிதரனையும் விசாரித்துவிட்டு, உங்க மேல புகார் இருந்தும், தினந்தினம் வந்து சும்மா சும்மா பாத்துவிட்டு விளக்கம் மட்டும் சொல்லிவிட்டு போயிட்டுயிருக்கீங்க, உங்க மனசில என்ன நினைச்சுட்டு இருக்கீங்க என்று கேட்டார். அதற்கு நாங்கள் இருவரும் அவரிடம், நாங்க தப்பு பண்ணல சார், பணத்தை கொடுத்துட்டு நான்தான் சார் பணத்த அவங்களிடமிருந்து வாங்க முடியாமலும், எந்தவித செட்டில்மெண்டும் ஆகாம இருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு காவல் உதவி ஆணையர் திரு.ஸ்ரீதர் அவர்கள் என்னிடம், இது சிவில் மேட்டர், தொகையும் பெரியதாக உள்ளது, நான் இதுல மெனக்கிட்டு, நீங்க பணத்த வாங்க, நான் ரிஸ்க்க எடுக்காம, நான் உங்களுக்கு சும்மா உதவி செய்யமுடியுமா என்று சொன்னார். சார் நியாயமா பார்த்து விசாரித்து முடிங்க சார் என்று சொன்னதற்கு, அவர் என்னிடம், உங்க பார்ட்னர் திரு.லெட்சுமி காந்தனிடம் ஏற்கனவே பேசியிருக்கேன், 80 லட்சம் வரை தருவதாக சொல்லியுள்ளார், அப்படி 80 லட்சம் ரூபாய் உங்களுக்கு வாங்கி தந்துவிடுகிறேன், எனக்கு அதில் 5% தொகையான 4 லட்சம் பணத்தை எனக்கு தனியா கொடுத்திருங்க என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், ஏற்கனவே நான் லட்ச கணக்கில் முதலீடு செய்திட்டு, நஷ்டத்தில் இருக்கேன், இதுல சாருக்கு தனியா 4 லட்சம் பணம் கேக்கிறீங்கள சார், பணம் இல்லாமல் விசாரிச்சு எழுதி வாங்கி கொடுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், சரிங்க, அட்வான்சா 1 லட்சமாவது கொடுங்க, மீதத்தை உங்களுக்கு செட்டில்மெண்ட் ஆன பிறகு கொடுங்க என்று சொல்லிக்கொண்டே, எனக்கு தனியா பணம் கொடுத்தீங்கனா, நான் உங்களுக்கு பேவரா இந்த பேப்பர எழுதி மேல அனுப்புவேன், இல்லைனா நடவடிக்கை வேறமாதிரி இருக்கும் என்று கறாராக சொன்னார். லஞ்சம் கொடுக்க

எனக்கு விருப்பமில்லை. இருந்தாலும், அப்போது அவரிடம், சரிங்க சார் முதல்ல 1 லட்ச பணத்தை எடுத்துகிட்டு வந்து சாரை பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு, நான், எனது நண்பர் திரு.முரளிதரனை அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன். என்னிடம் லஞ்சம் கேட்ட ஸ்ரீரங்கம் சரக காவல் உதவி ஆணையர் திரு.ஸ்ரீதர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd) C.Rajeshkanna **12/12/2017.** Madam, Submitted to the Court of the Hon'ble Special Judge for the trial cases of the PC Act-1988, Trichy. Received this report at 14.00 hours on 12.12.2017 and conducted a Preliminary Enquiry. Registered a case in Trichy V&AC Cr.No. 13/2017 u/s 7 of PC Act 1988 at 17.30 hrs on 12.12.2017. (Sd) F.Xavier Rani, 12.12.2017, Inspector of Police, V&AC, Trichy.

[F.XAVIER RANI]
12/12/17